# யா/ஊரெழு கணேச வித்தியாசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழா
## 2025







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இலட்சினை

# மகுட வாசகம் (Motto)

அன்பு, அறிவு, ஆரோக்கியம்

# நோக்கக்கூற்று (Vision)

எதிர்கால சந்ததிக்குப் பயனுறும் வகையில் வினைத்திறனுடைய, ஆக்கத்திறன் மிகுந்த சிந்தனைகளைக் கொண்ட, கற்றல் பண்புகள் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குதல்

# பணிக்கூற்று (Mission)

- கலைத்திட்டத்திற்கு அமைவாக மாணவர்களின் ஆற்றலை வளர்த்தல்
- கணனி ஆங்கில அறிவை விருத்தி செய்தல்
- சமூக பண்பாடு விழுமியங்களை பேணிப் பாதுகாத்தல்
- மாற்றமுறும் உலகினை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலை பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ஊரெழு கணேச வித்தியாசாலை

## பரிசளிப்பு விழா அழைப்பிதழ் - 2025

காலம் :- 2025.10.10 (வெள்ளிக்கிழமை) மு.ப 8.30 மணி
இடம் :- பாடசாலையின் பிரதான மண்டபம்
தலைமை :- திரு.இராஜா ஜெயக்குமார் (அதிபர்)
ஆசியுரை :- சிவஸ்ரீ.சோ.வாகீசகுருக்கள்

### பிரதம விருந்தினர்

திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா
(உதவிச் செயலாளர், மகளிர் விவகார அமைச்சு, வடமாகாணம்)

### சிறப்பு விருந்தினர்கள்

1. திரு.குமாரவேலு கண்ணதாசன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய் கல்வி கோட்டம்)
2. திரு.சிவசுப்பிரமணியம் சைலேஸ்வரன் (பொறுப்பதிகாரி, உரும்பிராய் உப அலுவலகம், வலி கிழக்கு,பிரதேசசபை)

### கௌரவ விருந்தினர்கள்

1. திரு.துரைவீரசிங்கம் துசியந்தன் (ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாண கல்வி வலயம்)
2. திரு.சபாரத்தினம் உதயகுமார் (பழைய மாணவர், உரிமையாளர் பிரசாத் நகையகம், யாழ்ப்பாணம்)
3. திரு.லாசரஸ் நடராசா (பழைய மாணவர், ஊரெழு பூரண ஆச்சிரமம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை தொடர்பான அடிப்படை விபரம்

1. பாடசாலையின் பெயர் : யா / ஊரெழு கணேச வித்தியாசாலை
2. பாடசாலை முகவரி : ஊரெழு மேற்கு சுன்னாகம்.
3. கிராமசேவகர் பிரிவு : ஊரெழு J/267
4. பிரதேச செயலாளர் பிரிவு : வலிகாமம் கிழக்கு கோப்பாய்
5. நிர்வாக மாவட்டம் : யாழ்ப்பாணம்
6. வலயக்கல்வித்திணைக்களம் : யாழ்ப்பாணம்
7. கோட்டக்கல்வி அலுவலகம் : கோப்பாய்
8. பாடசாலைக் குறியீட்டு இல : 1009015
   தொகைமதிப்பு இல : 09232
   பரீட்சை இல : 11381
9. பாடசாலை வகை : II
10. வகுப்பு பரம்பல் : தரம் 1 – 11
11. பிரதான மொழி : தமிழ்
12. இட அமைவு : பிரதேச சபை
13. தொலைபேசி இல:
    அலுவலகம் : 021 205 4701
    அதிபர் : 077 285 5413
14. மின்னஞ்சல் முகவரி : ureluureluganesha@gmail.com
15. பாடசாலை வங்கிக்கணக்குகள்

| இல | கணக்கு | வங்கி | வகை | இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | ஆசிரியர் சம்பளக் கணக்கு | BOC | நடைமுறை | 0007471254 |
| 2 | பாடசாலை அபிவிருத்திக் கணக்கு | BOC | நடைமுறை | 75855191 |
| 3 | வசதிகள் சேவைகள் கட்டணம் | BOC | நடைமுறை | 0007470737 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிபர் அறிக்கை 2025

ஊரெழு வீரகத்தி விநாயகரை நெஞ்சிலே நிறுத்தி, சிரம்தாழ்த்தி, வணங்கி, யா/ ஊரெழு கணேச வித்தியாசாலையின் 2025ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவிற்கு ஆசியுரை நிகழ்த்த வந்திருக்கின்ற சிவஸ்ரீ சோ.வாகீசக்குருக்கள் அவர்களே!

பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருக்கின்ற வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளரும் எமது பாடசாலை பழைய மாணவருமான திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக இருவர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றீர்கள். அந்த வகையில் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.குமாரவேலு கண்ணதாசன் அவர்களே! மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி திரு.சிவசுப்பிரமணியம் சைலேஸ்வரன் அவர்களே!

கௌரவ விருந்தினர்களாக இங்கே மூவர் கலந்து கொண்டிருக்கின்றீர்கள். அந்த வகையில் யாழ்ப்பாணக்கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமான திரு.துரைவீரசிங்கம் துசியந்தன் அவர்களே! யாழ்ப்பாணம் பிரசாத் நகைமாளிகை உரிமையாளரும், எமது பாடசாலையின் பழைய மாணவரும், ஊரெழு பர்வத வர்த்தினி அம்மன் ஆலய செயலாளருமாகிய திரு.சபாரத்தினம் உதயகுமார் அவர்களே! மற்றும் எமது பாடசாலையின் பழைய மாணவரும் ஊரெழு பர்வத வத்தினி அம்மன் ஆலய உபதலைவருமான திரு.லாசரஸ் நடராசா அவர்களே!

மற்றும் பெற்றோர்களே! பழைய மாணவர்களே! நலன் விரும்பிகளே! சக பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கங்கள் உரித்தாகட்டும்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருக்கின்ற திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா ஊரெழு கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். முன்பு வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சில் பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றியவர். இவர் எமது பாடசாலையில் 1982ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றவர். இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக உள்ளார். எனது மாணவியும் அவர் என்பதை கூறுவதில் பெருமையடைகின்றேன். அவரது ஆலோசனைகளும் உதவிகளும் எமது பாடசாலை வளர்ச்சிக்கு கிடைக்கும் என நம்புகிறேன். இவரை பிரதம விருந்தினராக அழைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகிய கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.குமாரவேலு கண்ணதாசன் அவர்கள் வடமராட்சி பிரதேசத்தை சார்ந்தவர். விஞ்ஞான பாட ஆசிரியராக என்னோடு சமகாலத்தில் கற்பித்தவர். பின்னர் அதிபர் சேவையில் இணைந்து யா/அம்பன் அ.மி.த.க பாடசாலையின் அதிபராக பணிபுரிந்து கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் கோட்டதின் பணிப்பாளராக 30.04.2025 அன்று பொறுப்பேற்று பணியாற்றி வருபவர். அமைதியாகவும் இனிமையாகவும் பழகும் சுபாவம் கொண்டவர். இவர் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக வந்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான திரு.சி.சைலேஸ்வரன் அவர்கள் திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவர். வலி கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகத்தை சிறப்பாக வழி நடாத்தி வருபவர். எமது பாடசாலை வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர். இவரும் எனது மாணவர் எனக் குறிப்பிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவரை சிறப்பு விருந்தினராக அழைத்தமையினை முன்னிட்டும் மகிழ்ச்சியடைகிறோம்.

கௌரவ விருந்தினர்களில் ஒருவராகிய திரு.துரைவீரசிங்கம் துசியந்தன் ஊரெழுவை பிறப்பிடமாகக் கொண்டவர். சித்திர பாட ஆசிரிய ஆலோசகர். எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். இவ்வாறே கௌரவ விருந்தினர்களில் இன்னொருவரான திரு.சபாரத்தினம் உதயகுமார் ஊரெழுவை பிறப்பிடமாகக் கொண்டவர். சமூக அக்கறை கொண்ட ஒரு தொழில் அதிபர். எமது பாடசாலையின் திருத்த வேலைகள் பலவற்றுக்கு நிதி அனுசரணை வழங்கியவர். மற்றும் கௌரவ விருந்தினர் திரு.லாசரஸ் நடராசா அவர்களும் ஊரெழுவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆன்மீகப் பணிகளில் நாட்டம் கொண்டவர். ஊரெழு பூரண ஆச்சிரமத்தில் பணி செய்து வருகிறார். கௌரவ விருந்தினராக இவர்கள் மூவரும் வருகை தருவதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

**பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் ......**
**(பொன் விழா மலரிலிருந்து)**

- எமது கலைக் கோயிலானது அப்போதைய சைவ வாலிபர் சங்கத்தினால் திரு.சிற்றம்பலம் என்பவரின் வீட்டில் 1929.04.23 அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.
- 1930.06.12 இல் திரு.வி.பேரம்பலத்தின் இல்லத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.
- பிரம்ம ஸ்ரீ பொன்னையா சந்ததியினால் வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு தர்மாசனம் செய்த முல்லைக்கட்டை எனும் 12 பரப்புக் காணியில், திரு.வி.ஆர்.தம்பையா அவர்களின் உழைப்பில், சைவ வித்தியா விருத்திச் சங்க செயலாளர் திரு.சு.இராசரத்தினம் அவர்களால் 1931.12.09 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- 1931.02.09 இல் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது.
- சைவ வாலிப சங்கம் "கணேச வித்தியாசாலையும் வித்தியா தர்மமும்" எனும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு மக்களிடம் நிதி சேர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சைவ வாலிப சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க திரு.வி.ஆர்.தம்பையா மலாயா சென்று "மலாயா ஊரெழு சேவா சங்கம்" அமைத்து நிதி திரட்டினார். அவரே பாடசாலையின் முதலாவது முகாமையாளராகவும் அமைந்தார்.
- முதலாவது தலைமை ஆசிரியராக குப்பிழானைச் சேர்ந்த திரு.த.கந்தையா பொறுப்பேற்று 35 வருட காலம் சிறப்பாக நிர்வகித்தார். இவரது காலத்தில் 8 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டதுடன் 300 மாணவர்கள் வரை கல்வி கற்றனர்.
- 1961 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.
- இன்றைய நூலகக் கட்டிடம் 1975.02.05 ஆம் திகதி திரு.த.தம்பிராசா குடும்பத்தினால் நன்கொடையாக கையளிக்கப்பட்டது.
- பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் 1987.03.16 இல் உறுதி முடிக்கப்பட்டது. இக் காணி 1980.03.31 இல் முதற்பதிவு செய்யப்பட்டது. 1987.06.22 இல் யாழ் கல்விக் கந்தோரில் பதிவு செய்யப்பட்டது.
- 2024.03.20 அன்று பாடசாலையில் ரூபா.60லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஊரெழு அபிவிருத்திச் சங்கத்தினால் புனரமைக்கப்பட்ட பிரதான மண்டபம் அப்போதைய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.அம்பலவாணர் சிவபாதசுந்தரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- 2024.07.31 அன்று பழைய மாணவர்களான திரு.பஞ்சாட்சரம் இரத்தினகுமார் - நிரஞ்சனா தம்பதியால் (ஜேர்மனி) ஹனொன் நிழற்பிரதி எந்திரம் கொள்வனவு செய்து தரப்பட்டது. இதன் பெறுமதி ரூபா.354,000/= ஆகும்.
- திரு.பரமசிவம் (UK) அவர்களால் தனது தாயார் திருமதி. செல்லம்மா நடராசா அவர்களின் நினைவாக ரூபா. 12 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் கரப்பந்தாட்ட ஆடுகளம் அமைத்து தரப்பட்டது.
- பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கான சுற்று மதிலும் நுழைவாயிலும் திரு.நடேசபிள்ளை சுந்தரேஸ்வரன் (UK) அவர்களால் 14.02.2025 அன்று அமைத்து தரப்பட்டது.

**மாணவர் தொகை**

எமது பாடசாலையில் மாணவர் விபரம்

| தரம் | தொகை |
|---|---|
| 1 - 5 | 51 |
| 6 – 11 | 68 |
| **மொத்தம்** | **119** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையின் மாணவர் தொகை வீழ்ச்சி அடைந்து வருகின்றமையை அவதானிக்க முடிக்கின்றது. இந்த வீழ்ச்சிக்கு பின்வரும் காரணங்களை குறிப்பிட முடியும்.

1. தமிழ் மக்களிடையே பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து செல்கின்றமை
2. வசதி படைத்த பெற்றோர்கள் நகர்புறப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்க்க விரும்புகின்றமை
3. மீள்குடியமர்வுகள், குடிப்பெயர்வுகள், குடும்பப் பிளவுகள் காரணமாக வேறு இடங்களில் பெற்றோர் குடியமர்தல்

இவற்றை விட மாணவர் இடைவிலகுதல், ஒழுங்கற்ற வரவு, பெற்றோரின் அறியாமை, வறுமை முதலிய காரணங்களும் மாணவர் கல்விக்கு தடையாக உள்ளன.

## மாணவர் தொகையை எப்படி அதிகரிக்கலாம்?

1. தமிழ் மக்களிடையே பிறப்பு வீதம் அதிகரிக்கப்பட வேண்டும்.
2. வசதி படைத்த பெற்றோர்களும் தம் பிள்கைளை கிராமத்தின் ஒரே பாடசாலையாகிய எமது பாடசாலையில் தமது பிள்ளைகளை சேர்க்க முற்பட வேண்டும்.
3. பெற்றோர் பிள்ளைகளின் வரவொழுங்கு, பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவர் செயற்பாடுகள் என்பவற்றில் கவனம் செலுத்துதல்
4. ஆசிரியர்கள் தமது கடமை நேரத்திற்கு அப்பால் அர்ப்பணிப்புடன் கற்பித்தல்
5. பாடசாலைச் சமூகம் சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பை இப் பாடசாலை நிர்வாகத்திற்கு வழங்குதல்.

## ஓய்வு பெற்றவர்கள்

எமது பாடசாலையின் நீண்ட காலம் பணியாற்றிய ஆசிரியர் மூவர் 2025ம் ஆண்டு ஓய்வு பெற்றனர். எமது பாடசாலையில் 8 ஆண்டுகள் ஆசிரியப்பணி செய்தவர்களில் திருமதி.யசோதா செல்வக்குமாரன் 2025.02.25ஆம் திகதி ஓய்வு பெற்றார். எமது பாடசாலையில் 12 ஆண்டுகள் பணி செய்த ஆசிரியை செல்வி குணநாயகி மார்க்கண்டு 2025.04.09 அன்று ஓய்வு பெற்றார். எமது பாடசாலையில் 19 ஆண்டுகள் சங்கீத பாட ஆசிரியராகவும், மூன்று ஆண்டுகள் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய ஆசிரியை திருமதி.சாரதாதேவி ரவிச்சந்திரன் அவர்கள் 2025.06.14 அன்று ஓய்வு பெற்றார். இந்த ஆசிரியர்கள் மூன்று பேரும் இப்பாடசாலை சமூகத்துக்கு ஆற்றிய பணிக்காக நன்றி தெரிவிப்பதுடன் இவர்களின் ஓய்வுக்காலம் நலமாகவும் மகிழ்வாகவும் அமைய பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

- ❖ மாணவர்களுக்கான உடற்பயிற்சிச் செயற்பாடுகள் காலையில் சகல ஆசிரியர்களினதும் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.
- ❖ தரம் 1இல் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா 2024.02.26ஆம் திகதி நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு.குமணன் குகநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலயத்தின் 'செயற்பட்டு மகிழ்வோம்' செயற்றிட்ட இணைப்பாளர் திரு.சி.சிவகாந்தா மற்றும் பழைய மாணவி திருமதி. ச.ஜெகநாதன் அவர்களும் பங்குபற்றினர்.
- ❖ பாடசாலையின் ஆசிரியர் தின விழா பழைய மாணவர் திரு.து.ஜெகதீஸ்வரன் அவர்களுடைய தலைமையில் 07.10.2024 அன்று நடைபெற்றது. இதற்கான நிதி அனுசரணையை பழைய மாணவி திருமதி.வாசுகி ரகுநாதன் (UK) வழங்கியிருந்தார்.
- ❖ தரம் 8,9,10 மாணவர்கள் 2024.10.10 அன்று கொழும்பு மெயிற்லான்ட் கழக அனுசரணையுடன் கைதடி முதியோர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, முதியோர்களுடன் கலந்துரையாடி, கலை நிகழ்ச்சிகளையும் மேற்கொண்டனர்.
- ❖ எமது மாணவர்களில் அனேகமானோர் வலி கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக நூலகத்தில் அங்கத்தவராக இணைக்கப்பட்டு, நூல்களை இரவல் பெற்று வந்தனர். எனினும் பெற்றோரின் ஒத்துழைப்பின்மை காரணமாக நூல்கள் இரவல் பெறுதல் குறைவடைந்துள்ளது. இவ்விடயத்தில் பெற்றார்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.
- ❖ மாணவர் மன்றங்கள் வாராந்தம் ஆரம்ப வகுப்புகளுக்கு வியாழக்கிழமைகளிலும், இடைநிலை வகுப்புகளுக்கு புதன்கிழமைகளிலும் நடைபெற்று வருகின்றன. இடைநிலைப் பிரிவில் இந்துமன்றம், தமிழ்மன்றம், விஞ்ஞான கணித மன்றம், வர்த்தகமன்றம், ஆங்கில மன்றம், அழகியல் மன்றம், சமூக விஞ்ஞான மன்றம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. இம்மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் பொறுப்பாசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள் தெரிவிக்கின்றேன்.
- ❖ நடமாடும் நூலக சேவை யாழ்ப்பாணம் பொது நூலகத்தினரால் 2024.07.31 அன்று நடாத்தப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண பல்கலைகழக நாடகமும் அரங்கியலும் துறை மாணவர்களின் அரங்கச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.
- ❖ ஆரம்பக்கல்வி மாணவர்கள் 53 பேர் பங்குபற்றிய கல்விச் சுற்றுலா 2024.06.07 அன்று நடைபெற்றது. இச் சுற்றுலாவில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் 5பேரும் பெற்றோர் 10பேரும் பங்குபற்றினர். இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா 2024.07.05ஆம் திகதி அன்று நடைபெற்றது. இச் சுற்றுலாவில் இடைநிலைப்பிரிவு மாணவர்கள் 54பேருடன் ஆசிரியர்கள் 10பேரும் பெற்றோர்கள் 6பேரும் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆசிரிய மாணவர்களைக் (1ஆம் வருட முகிழ்நிலை ஆசிரியர்கள்) கொண்ட குழுவினர் 2024.03.18 வருகை தந்து தொடர்ந்து மூன்று தினங்கள் பாடசாலை புரிந்து கொள்ளல் செயன்முறையில் ஈடுபட்டனர். இம் மாணவர்களுக்கு தலைமை தாங்கி அழைத்து வந்த விரிவுரையாளர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் அவரது மைத்துனர் திரு. தவத்துரை மனோகரதாசன் அவர்களின் நிதியுதவி மூலம் முச்சக்கர வண்டியை விசேட தேவையுள்ள மாணவி க.கிருத்திகாவுக்கு வழங்கினர்.
- பாடசாலையின் பரிசளிப்பு விழா 2024.10.25 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வகம் நிறுவனத்தின் தலைவர் திரு.ஆறுமுகம் ரவீந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக்கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சிற்றம்பலம் கணேசலிங்கம், பாடசாலையின் பழைய மாணவர் திரு.துரைராஜா ஜெயதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக ஊரெழுவிலுள்ள முன்பள்ளிகளின் ஆசிரியைகளான திருமதி மிரிகா சசிகாந்தன் (வளர்பிறை முன்பள்ளி, கொத்தணி தலைவி), செல்வி.சுஜந்தா கருணானந்தராசா (கலைவாணி முன்பள்ளி), திருமதி.சுபாசினி அகிலன் (சர்வசக்தி முன்பள்ளி), திருமதி.சந்திரிகா துஸ்யந்தன் (பாரதிதாசன் முன்பள்ளி), திருமதி.கௌசலா விக்கினேஸ்வரன் (பாரதி முன்பள்ளி), செல்வி.சதுர்ஜனா அன்ரனி ஜோர்ஜ் (முத்தமிழ் முன்பள்ளி) ஆகியோர் பங்குபற்றினர்.

**கல்விசார் ஊழியர்கள்**

தற்போது இப்பாடசாலையில் கல்விப் பணியில் 21 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனார். இவர்களில் 19பேர் வாரத்தில் ஐந்து நாட்களும், ஒருவர் வாரத்தில் மூன்று நாட்களும் கற்பித்து வருகின்றனர். இவர்களை விட கணனி ஆசிரியர் ஒருவர் எமது பாடசாலை ஆளணியில் உள்ளடங்காவிடினும் வாரத்தில் இரு நாட்கள் கற்பித்து வருகின்றார். இவர்களின் அர்ப்பணிப்பான சேவை தொடர வாழ்த்துகிறேன்.

**கல்விசாரா ஊழியர்கள்**

கல்விசாரா ஊழியர்களாக தற்போது 02 பேர் கடமையாற்றுகின்றனர். இவர்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.வி.சுஜன், பாடசாலைப்பணியாளர் திருமதி.ட.சுபாஸ் ஆகியோர் உள்ளனர். அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.வி.சுஜன் அவசியம் கருதி வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களையும் கற்பித்து வருகின்றார். இவர்களை விட பாடசாலையின் காவலாளியான திரு.இ.சந்திரமோகன் சேவையின் தேவை கருதிய தற்காலிக இடமாற்றம் பெற்று யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 2024.06.05ஆம் திகதி முதல் பணியாற்றி வருகின்றார். எதிர்காலத்தில் இவர்களின் பணி மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தைக் கற்பித்த திரு.சு.இந்திரதாஸ் அவர்கள் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று 2025.01.27ஆம் திகதி முதல் பணியாற்றி வருகின்றார். மற்றும் விளையாட்டுப் பயிற்றுநர் செல்வி.அ.ஆன்சமீனா அவர்கள் இடமாற்றம் பெற்று யா/.இளவாலை கொன்வென்ட் பாடசாலையில் 2025.06.18ஆம் திகதி முதல் பணியாற்றி வருகின்றார். இவர்களது பணி மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

## இடமாற்றம் பெற்று வந்தோர்

சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தைக் கற்பிக்க எமது பாடசாலைக்கு ஆசிரியர் திருமதி.ப.ஜெனோசியஸ், மற்றும் சங்கீத பாடத்தைக் கற்பிக்க திருமதி.கா.திலீபன், குடியியற்கல்வி பாடத்தைக் கற்பிக்க திரு.இ.சாந்தரூபன், செல்வி.சு.ஶ்ரீவிஜயாதேவி ஆகியோர் 2025இல் இடமாற்றம் பெற்று வந்து சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.இவர்களது பணி மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

## பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு (SDEC)

பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளும் அமைப்பாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு அமைந்துள்ளது. இக்குழு ஐந்தாண்டுத்திட்டம், அமுலாக்கல் திட்டம் என்பவற்றை தயார் செய்கின்றது. இக்குழுவில் அங்கம் வகிப்போர்

1. திரு.இ.ஜெயக்குமார் (அதிபர்)
2. திரு.இ.சாந்தரூபன் (ஆசிரியர், பொருளாளர்)
3. திருமதி.து.சதீஸ்கரன் (ஆசிரியர்)
4. திருமதி.தே.புவனேந்திரன் (ஆசிரியர்)
5. திருமதி.ச.துஸ்யந்தன் (பெற்றோர் - செயலாளர்)
6. திரு.து.ஜெயதீஸ்வரன் (பழைய மாணவன்)
7. திரு.சி.கஜின்சன் (பழைய மாணவன்)
8. திருமதி.சிவரூபா (பெற்றோர்)
9. திருமதி.கு.ரகுநாதன் (வலயப் பிரதிநிதி)
10. திருமதி.க.உசாந்தினி (பெற்றோர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவக் குழுவும் நிர்வாகமும்

பாடசாலையின் முகாமைத்துவ நிர்வாக செயற்பாடுகளை முகாமைத்துவக் குழு சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இந்த வகையில் 2025ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் குழுவில் பின்வருவோர் இடம்பெறுகின்றனர்.

1. திரு.இ.ஜெயக்குமார் (அதிபர்)
2. திரு.ப.சுதேஸ் (ஆசிரியர்)
3. திரு.இ.திலீபன் (ஆசிரியர்)
4. திருமதி.தே.புவனேந்திரன் (ஆசிரியர்)
5. திருமதி.சி.சிறிபால்ராஜ் (ஆசிரியர்)
6. செல்வி.ரா.சுப்பிரமணியம் (ஆசிரியர்)

## கல்விப் பெறுபேறுகள்:

- 2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் எழுதிய 13 மாணவர்களில் 100 புள்ளிகளுக்கு மேல் **04** மாணவர்களும் 70 – 100 புள்ளிகளுக்கு இடையே **04** மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் திருமதி.தேவசேனா புவனேந்திரன் அவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2024) சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் விபரம்:**

| மாணவர் பெயர் | பரீட்சைப் புள்ளிகள் |
|---|---|
| பா.அஜய் | 127 |
| ஜீ.யஸ்ரினா | 118 |
| ச.சானுஜா | 109 |
| வி.வஸ்மிதா | 102 |
| ச.ரஸ்மிகா | 92 |
| ச.வைஸ்ணவி | 87 |
| ச.சங்கீத் | 75 |
| ர.சஞ்சனா | 75 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ 2024ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சை எழுதிய **08** மாணவர்களில் **02** பேர் மட்டும் க.பொ.த (உ/த) கற்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கும் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் விபரம்:**

| மாணவர் பெயர் | பரீட்சைப் பெறுபேறுகள் |
|---|---|
| ம.றஸ்மியா | 2A, 2B, 5S |
| சி.கோபிசா | 3B, 1C, 5S |

**தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை கடந்தகால பகுப்பாய்வு (2020 – 2025)**

| வருடம் | பரீட்சைக்கு தோற்றியோர் எண்ணிக்கை | சித்தி பெற்றோர் எண்ணிக்கை | சித்தி பெற்றோர் சதவீதம் % | 70 இற்கு மேல் புள்ளி பெற்றோர் எண்ணிக்கை | 70 இற்கு மேல் புள்ளி பெற்றோர் சதவீதம் % | 100 இற்கு மேல் புள்ளி பெற்றோர் எண்ணிக்கை | 100 இற்கு மேல் புள்ளி பெற்றோர் சதவீதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| 2020 | 09 | - | - | 05 | 45 | 4 | 44 |
| 2021 | 13 | - | - | 04 | 31 | 09 | 15 |
| 2022 | 08 | - | - | 04 | 50 | 04 | 50 |
| 2023 | 13 | 01 | 8 | 05 | 38 | 07 | 54 |
| 2024 | 13 | - | - | 4 | 31 | 4 | 31 |
| 2025 | 08 | - | - | 04 | 50 | 1 | 13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைப் பெறுபேறுகள்

1.க.பொ.த சாதாரணதர பரீட்சை கடந்த கால பகுப்பாய்வு (2020 –2024)

| இல | பாடம் | 2020% | 2021% | 2022% | 2023% | 2024% |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிறிஸ்தவம் | - | 100 | 100 | - | - |
| 2 | சைவநெறி | 55 | 80 | 64 | 43 | 38 |
| 3 | தமிழ்மொழி | 68 | 70 | 56 | 50 | 50 |
| 4 | ஆங்கிலம் | 18 | 40 | 44 | 14 | 38 |
| 5 | விஞ்ஞானம் | 45 | 30 | 25 | 21 | 25 |
| 6 | கணிதம் | 45 | 40 | 38 | 21 | 25 |
| 7 | வரலாறு | 59 | 40 | 38 | 21 | 25 |
| 8 | சித்திரம் | 100 | 100 | 71 | 100 | 75 |
| 9 | சங்கீதம் | 100 | 100 | 100 | 100 | 100 |
| 10 | வணிகம் | 100 | 100 | 80 | 25 | - |
| 11 | குடியுரிமை | 50 | - | - | - | - |
| 12 | புவியியல் | 12 | 50 | 27 | 10 | 50 |
| 13 | சுகாதாரம் | 92 | 100 | 42 | 77 | 60 |
| 14 | நடனம் | 100 | 100 | 100 | - | 100 |
| 16 | தகவல் தொழில்நுட்பம் | - | - | 100 | - | - |
| 17 | மனைப்பொருளியல் | 60 | 100 | 100 | 0 | 33 |
| 18 | விவசாயம் | 80 | - | - | - | - |

\- மாணவரின்மை

க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் சதவீதம்

| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| பரீட்சைக்கு தோற்றியோர் எண்ணிக்கை | 24 | 10 | 16 | 16 | 08 |
| க.பொ.த உயர் தரத்திற்கு தகுதி பெற்றோர் எண்ணிக்கை | 07 | 4 | 6 | 2 | 02 |
| க.பொ.த உயர் தரத்திற்கு தகுதி பெற்றோர் சதவீதம் | 29 | 40 | 38 | 12.5 | **25** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலை நூலகமும் வசதியும்

மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் நோக்குடன் பாடசாலை நூலகம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. 2024.07.31 அன்று யாழ் பொது நூலகமும் யாழ் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் கற்கைத் துறையினரும் இணைந்து நடமாடும் நூலக சேவை மற்றும் அரங்கச் செயற்பாடுகளை நடத்தினர்.

வாசிப்பு மாதமாகிய ஐப்பசி மாதத்தின் போது புத்தாக்க கண்காட்சி, நடமாடும் சேவை, பொது அறிவுப் போட்டி என்பன நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. 2024ஆம் ஆண்டுக்கான GEMP திட்ட நிதியில் ஒரு தொகுதி புத்தகங்கள் நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டன. நூலக செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்து வரும் பொறுப்பாசிரியர் திருமதி.றஜிதா உதயசங்கர் அவர்களை பாராட்டுகின்றேன்.

### மாணவர் ஒழுக்கம்

தமிழ்ச் சமூகத்தின் அவசியமானதும் அவசரமானதுமான தேவை நல்ல தலைவர்களே. நாளை இம் மண்ணில் நல்ல தலைவர்கள் உருவாக தகுந்த முன்மாதிரிகளாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் அமைந்து வழிகாட்ட வேண்டுமென வேண்டுகின்றேன். ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படும் அறநெறி வகுப்புகளிலும் மாணவரை ஈடுபடுத்துதல் பெற்றோரின் கடமையாகும்.

### சுகாதார மேம்பாட்டுக் குழு

ஆரோக்கியமான வாழ்வே அரிய செல்வம். இந்த வகையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களை உள்ளடக்கியதாக சுகாதார மேம்பாட்டுக்குழு செயற்பட்டு வருகின்றது. இதனை பொறுப்பாசிரியராக திருமதி.பரீடா ஜெனோசியஸ் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் அநேகமான பெற்றோர்கள் வகுப்பு ரீதியாக வந்து சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதும் மகிழ்ச்சி தரும் விடயமாக உள்ளது.

### மாணவர் நலன்புரிகளும் நிகழ்வுகளும்

1. வாணி விழாவும் ஏடு தொடக்குதலும் 2024.10.12 அன்று நடைபெற்றன.
2. வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேசசபையின் உரும்பிராய் உபஅலுவலகத்தினால் மாணவர்களுக்கு வர்ணம் பூசுதல், சொல்லாக்கம், நுண்ணறிவு, விரைவு கணிதம் முதலிய போட்டிகள் 2024.10.25 அன்று நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.
3. ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு (தரம் 1-5) 51 பேருக்கு கல்வி அமைச்சின் அனுசரணையுடன் விசேட போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இடைநிலைப் பிரிவு(தரம் 6-11) மாணவர்களுக்கு விசேட போசாக்கு வழங்கும் திட்டம் 2023.12.04 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரணையை இப்பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது அதிபரும் இதே பாடசாலையில் தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் பணிபுரிந்தவருமான குப்பிளானைச் சேர்ந்த திரு.நரசிம்மன் கந்தையா என்பவரின் பேரப்பிள்ளைகளின் (கனடா) நிதி அனுசரணையுடன் வழங்கப்படுகிறது. 2025.09.30 திகதி வரை இப்பணத்தை அன்னாரின் பேரப்பிள்ளைகள் 1,630,000 ரூபா நிதியை வழங்கியுள்ளார். இந்த உயரிய பணிக்காக அன்னாரின் குடும்பத்திற்கு பாடசாலை சமூகம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

4. 2024.02.20 அன்று பாடசாலை மட்ட வெளிவாரி மதிப்பீடு நடைபெற்றது. இதில் பாடசாலை கல்வித் தரப்பண்புச் சுட்டியாக 59 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.
5. மேல்மருத்துவத்தூர் பங்காரு அம்மாளின் பிறந்த தினத்தை முன்னிட்டு 2024.03.03 அன்று குப்பிளானைச் சேர்ந்த நலன்விரும்பிகளான கலைச்செல்வி திருக்குமார் தம்பதியால் (சுவிஸ்) தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## பௌதீக வளங்களின் மேம்பாடு

- பாடசாலையின் கிணறு 2024.02.18,2024.10.23 ஆகிய திகதிகளில் குளோரின் இட்டு கலக்கி இறைக்கப்பட்டது.
- பாடசாலையின் பிரதான மண்டபம் ஊரெழு அபிவிருத்திச் சங்கத்தினால் ரூபா 60இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு 2024.02.22 அன்று அப்போதைய அரசாங்க அதிபர் திரு.அ.சிவபாதசுந்தரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- பாடசாலையின் பழைய மாணவி திருமதி.சகுந்தலாதேவி ஜெகநாதன் அவர்களால் ஒலிபெருக்கித் தொகுதி 2024.02.24 அன்று கையளிக்கப்பட்டது.
- பிரதான மண்டபத்திற்கான மின்விசிறிகள் 2, குவிய விளக்கு 1, சுவாமிப்பட தட்டுக்கான மின்குமிழ்கள் என்பன 2024.04.10 அன்று பாடசாலை நலன்விரும்பி அமரர்.வி.ஆர் தம்பையா அவர்களின் மகன் திருநாவுக்கரசு அவர்களின் பிள்ளைகளால் ரூபா 60,000 செலவில் அமைத்து தரப்பட்டன.
- 2024.06.06 அன்று காலமான மாணவி செல்வி.ஸ்ரீரங்கன் மதுமிதா அவர்களின் நினைவாக 150கோப்பைகள் அன்னாரின் குடும்பத்தினரால் வழங்கப்பட்டன.
- 2024.07.31 அன்று பழைய மாணவர்களான பஞ்சாட்சரம் இரத்தினகுமார் நிரஞ்சனா தம்பதியினரால் ரூபா 354,000 பெறுமதியான நிழல் பிரதி எந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டது. இது கற்பித்தல் மற்றும் நிர்வாக பணிகளை இடைவிடாது தொடர அரிய உதவியாக அமைந்தது.
- முன்னாள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சித்தார்த்தன் அவர்களின் பன்முக நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா.ஒரு லட்சம் பெறுமதியான சிறிய கோர்ன் 3, தொலைபேசி வயர் 100மீற்றர், அம்பிளி வயர் என்பன வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையின் மலசலகூடங்களில் உள்ள குப்பைகள் இரத்தினகுமார் நிரஞ்சனா தம்பதியினரால் 2024.08.31 அன்று சுத்தம் செய்து தரப்பட்டது.
- பழைய மாணவன் திரு.ரவிச்சந்திரன் கயந்தன் என்பவரால் 2024.09.01 அன்று எழுது பலகைகளுக்கு பச்சை வர்ணம் பூசுவித்துத் தரப்பட்டது.
- 2024.11.12 அன்று வலி.கிழக்கு பிரதேசசபையினால் உரும்பிராய் உப அலுவலகம் ஊடாக நான்கு வர்ண கழிவுத் தொட்டிகள் 4 வழங்கப்பட்டன.
- 2024.12.23 அன்று முன்னாள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக ரூபா.60,000 பெறுமதியான 31 பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கப்பட்டன.

**பாடசாலையின் தேவைகள்**

1. கணனி அறை, ஆசிரியர் வாண்மை விருத்தி அறை, நூலகம் ஆகியவற்றின் கூரைப் பகுதியை சீரமைத்தல். இதன் மூலம் மழைக்காலத்தில் வெள்ளம் வருதல் தடுக்க முடியும்.
2. பாடசாலையின் வடக்கு, மேற்கு எல்லை வரைக்கும் முட்கம்பி வேலிகளுக்கு பதிலாக மதில் அமைத்தல். இதன் மூலம் பாடசாலையின் பாதுகாப்பு பலப்படும்.
3. பாடசாலையின் முன்புற மதில், விஞ்ஞான ஆய்வுகூடம், வகுப்பறைகள் என்பவற்றுக்கு புது வர்ணம் பூசி பொருத்தமான படங்கள் வரைதல். இதன் மூலம் மாணவர்களின் கல்வி அறிவு மேம்படும்.
4. 5S முகாமைத்துவத்தை சகல விடயங்களிலும் மேம்படுத்துதல். இதனால் பாடசாலை நிர்வாகத்தில் மேலும் வினைத்திறனுடன் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.
5. பெற்றோர்களிடையே பிள்ளைகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
6. பாடசாலையின் ஊட்டப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் அனைவரையும் இப்பாடசாலையில் இணைத்துக் கொள்ளக்கூடிய நிலைமையை உருவாக்குதல்.
7. விசேட தேவை, விவசாயம், ஆங்கிலம்(ஆரம்பக்கல்வி) முதலிய பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்களைப் பெறுதல்.
8. பொருத்தமான மனப்பாங்கு கொண்ட காவலாளி, உடற்பயிற்சி பயிற்றுநர் ஆகியோரைப் பெறுதல்.
9. மாணவரின் வரவொழுங்கை 100% ஆக அதிகரித்தலும் இடைவிலகலைத் தவிர்த்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நன்றிகள்

பரிசளிப்பு விழாவை நடாத்துவதற்கு நிதியுதவி வழங்கியவர்கள்

| இல | பெயர் | தொடர்பு | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1. | பெயர் குறிப்பிட விரும்பாத நலன் விரும்பி | | 40000.00 |
| 2. | சபாரத்தினம் சுகந்தன் (சுப்பையா சபாரத்தினம் ஞாபகார்த்தம்) | பழைய மாணவர் | 25000.00 |
| 3. | திரு.லாசரஸ் கந்தசாமி | பழைய மாணவர் | 25000.00 |
| 4. | திரு.T.நந்தகுமார் | பழைய மாணவர் | 20000.00 |
| 5. | திருமதி.பத்மாவதி பேரின்பமூர்த்தி | ஓய்வு பெற்ற ஆசிரியர் | 15000.00 |
| 6. | சொக்கலிங்கம் மகேஸ்வரி குடும்பம் | பழைய மாணவர் | 15000.00 |
| 7. | திருமதி.S.இராஜமல்லிகை | பழைய மாணவர் | 10000.00 |
| 8. | திரு.கணேசநாதன் ஐங்கரன் | பழைய மாணவர் | 10000.00 |
| 9. | திரு.இராசதுரை ஈஸ்வரன் | பழைய மாணவர் | 10000.00 |
| 10. | செல்வி.இராஜமனோகரி தம்பிமுத்து | ஓய்வு பெற்ற ஆசிரியர் | 5000.00 |
| 11. | திருமதி.சாரதாதேவி ரவிச்சந்திரன், | ஓய்வு பெற்ற ஆசிரியர் | 5000.00 |
| 12. | செல்வி.மார்கண்டு குணநாயகி | ஓய்வு பெற்ற ஆசிரியர் | 5000.00 |
| 13. | திரு.தில்லையம்பலம் உதயசூரியன் | பழைய மாணவர் | 1000.00 |
| 14. | திரு.இராஜா ஜெயக்குமார் | அதிபர், யா/ஊரெழு கணேச வித்தியாசாலை | 1000.00 |
| 15. | திரு.நந்தகுமார் | உரிமையாளர், N.K மண்டபம், ஊரெழு | மிதி வண்டி க.பொ.த.(சா.த) – 2024 சிறந்த பெறுபேறு பெற்ற மாணவிக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறுவோர் விபரம் - 2024

## தரம் : 1 மாணவர்கள் (2025)

1. பு.யேஸ்வித்
2. பி.அகிஷ்
3. சு.பிரவீன்
4. ஜெ.துலக்சன்
5. க.தருண்
6. வி.ஜீவியா
7. பா.கவிஷனா
8. நி.பிரனிகா
9. உ..அக்சா

## தரம் : 1 மாணவர்கள் (2024)

1. ச.தருக்ஷன்
2. ஜே.சுகின் லயுக்ஷன்
3. பி.திருட்சிகன்
4. ர.வர்ஷா
5. ச.அனந்திகா
6. பா.துஷாரா
7. மு.அஜீஷா
8. ர.கன்சிகா
9. செ.சர்ஜனா
10. க.யஸ்மிதா
11. து.கதிர்சனா
12. வ.தேயஸ்வினி
13. ந.கோமகள்

## தரம் : 2 மாணவர்கள் (2024)

1. கி.பிரவீன்
2. பா.கோபிஜன்
3. ஜ.டினோஜன்
4. க.கரிகனன்
5. கி.கமலநாதன்
6. ம.விஜயதாஸ்
7. அ.பகீரதன்
8. ரெ.சதீஸ்
9. க.தனுசன்
10. நி.நிக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் : 3 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| பா.டிலானி | சமயம், கணிதம் | 1ம் இடம் |
| | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் | 2ம் இடம் |
| இ.சர்மியா | சமயம், கணிதம் | 2ம் இடம் |
| | ஆங்கிலம் | 3ம் இடம் |
| ம.கெஸ்மிதா | சமயம், தமிழ், சுற்றாடல் | 3ம் இடம் |
| க.சபினா | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | கணிதம் | 3ம் இடம் |

## தரம் : 4 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| அ.அன்சீர் | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் | 1ம் இடம் |
| | கணிதம் | 2ம் இடம் |
| க.நிதுசன் | கணிதம் | 1ம் இடம் |
| | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | தமிழ், சுற்றாடல், சமயம் | 3ம் இடம் |
| அ.தஸ்மிகா | தமிழ், சுற்றாடல், சமயம் | 2ம் இடம் |
| | கணிதம், ஆங்கிலம் | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் : 5 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| வி.வஸ்மிதா | சமயம் | 1ம் இடம் |
| | தமிழ் | 3ம் இடம் |
| பா.அஜய் | கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | சமயம் | 2ம் இடம் |
| | ஆங்கிலம், | 3ம் இடம் |
| ச.சானுஜா | தமிழ், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | சமயம் | 2ம் இடம் |
| | சுற்றாடல், கணிதம் | 3ம் இடம் |
| | கணிதம், தமிழ், சுற்றாடல் | 2ம் இடம் |
| | சமயம், | 3ம் இடம் |
| ச.வைஸ்ணவி | ஆங்கிலம் | 2ம் இடம் |

## தரம் : 6 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| நி.ரிஷ்யா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, சுகாதாரம், புவியியல், PTS, நடனம், | 1ம் இடம் |
| | ஆங்கிலம் | 3ம் இடம் |
| செ.யஸ்மிதா | சங்கீதம் | 1ம் இடம் |
| | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, குடியுரிமை, சுகாதாரம், புவியியல், PTS, நடனம், | 2ம் இடம் |
| ச.கம்சியா | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | நடனம் | 2ம் இடம் |
| | சமயம், தமிழ், விஞ்ஞானம், குடியுரிமை, சுகாதாரம், ஆங்கிலம் | 3ம் இடம் |
| இ.சகானா | சங்கீதம், விஞ்ஞானம், | 2ம் இடம் |
| | கணிதம், வரலாறு, புவியியல், PTS | 3ம் இடம் |
| அ.மகிஷா | சங்கீதம் | 3ம் இடம் |
| நி.ரோகித் | சித்திரம் | 1ம் இடம் |
| பு.அஸ்வின் | சித்திரம் | 2ம் இடம் |
| தி.திலக்சன் | சித்திரம் | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் : 7 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| செ.தீபிகா | சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, புவியியல், சுகாதாரம், PTS, நடனம், ICT | 1ம் இடம் |
| | தமிழ் | 2ம் இடம் |
| | ஆங்கிலம் | 3ம் இடம் |
| வ.செமித்தா | தமிழ், ஆங்கிலம், சித்திரம், கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| | விஞ்ஞானம், கணிதம், வரலாறு, குடியுரிமை, புவியியல், PTS, ICT | 2ம் இடம் |
| க.சர்மிகா | சங்கீதம் | 1ம் இடம் |
| | ஆங்கிலம், சுகாதாரம், | 2ம் இடம் |
| | சமயம், கணிதம் | 3ம் இடம் |
| சு.ரஸ்மிதா | நடனம் | 2ம் இடம் |
| | தமிழ், வரலாறு, குடியுரிமை, PTS, ICT | 3ம் இடம் |
| ச.ஹரிஸ் | சித்திரம், சமயம், | 2ம் இடம் |
| | விஞ்ஞானம்,புவியியல், சுகாதாரம், | 3ம் இடம் |
| ட.நிவேதிகன் | சித்திரம் | 3ம் இடம் |

## தரம் : 8 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| கு.திசானா | தமிழ், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமை, புவியியல், PTS, நடனம் | 1ம் இடம் |
| | சைவநெறி , கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் | 2ம் இடம் |
| ப.பர்வின் | சைவநெறி , கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், சித்திரம் | 1ம் இடம் |
| | ஆங்கிலம், வரலாறு, குடியுரிமை, PTS, | 2ம் இடம் |
| | தமிழ், புவியியல் | 3ம் இடம் |
| ச.சகானா | சங்கீதம் | 1ம் இடம் |
| | தமிழ், புவியியல், | 2ம் இடம் |
| | கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், PTS, | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அ.டனுஷிகா | கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| | சித்திரம் | 2ம் இடம் |
| ச.யதுர்சன் | சங்கீதம் | 2ம் இடம் |
| | சைவநெறி, சுகாதாரம் | 3ம் இடம் |
| சு.சுவிர்தா | கிறிஸ்தவம் | 2ம் இடம் |
| | சித்திரம் | 3ம் இடம் |
| சி.லக்சியன் | ஆங்கிலம் | 3ம் இடம் |

## தரம் : 9 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| ச.சஸ்மியா | சைவநெறி, ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், நடனம், ICT | 1ம் இடம் |
| | தமிழ், கணிதம், PTS | 2ம் இடம் |
| | | |
| ச.சாணியா | தமிழ், சங்கீதம், PTS | 1ம் இடம் |
| | சைவநெறி, விஞ்ஞானம், ICT, சுகாதாரம், குடியுரிமை | 2ம் இடம் |
| | கணிதம், வரலாறு, புவியியல் | 3ம் இடம் |
| தி.திலக்சினி | கணிதம் | 1ம் இடம் |
| | ஆங்கிலம், வரலாறு, நடனம், புவியியல் | 2ம் இடம் |
| | சைவநெறி, தமிழ், விஞ்ஞானம், குடியுரிமை, சுகாதாரம், PTS | 3ம் இடம் |
| சோ.ஜிந்துசன் | சித்திரம் | 1ம் இடம் |
| | ICT | 3ம் இடம் |
| ர.கனிஸ்ரன் | சித்திரம் | 2ம் இடம் |
| | ஆங்கிலம் | 3ம் இடம் |
| நா.கபின்சன் | சித்திரம் | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் : 10 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| சு.கேனுஜா | கணிதம், சைவநெறி, ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், நடனம் | 1ம் இடம் |
| | சுகாதாரம் | 3ம் இடம் |
| சி.நிலக்சனா | ICT, சங்கீதம் | 1ம் இடம் |
| | கணிதம், சைவநெறி, ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம் | 2ம் இடம் |
| பி.டினுஸ்ரா | புவியியல் | 1ம் இடம் |
| | சுகாதாரம் | 2ம் இடம் |
| | கணிதம், சைவநெறி, தமிழ், விஞ்ஞானம், சித்திரம், | 3ம் இடம் |
| க.கம்சி | சுகாதாரம் | 1ம் இடம் |
| | நடனம், புவியியல் | 2ம் இடம் |
| | ஆங்கிலம், வரலாறு | 3ம் இடம் |
| சு.நிதுஜன் | சித்திரம் | 1ம் இடம் |
| செ.லிதுஜன் | சித்திரம் | 2ம் இடம் |
| ம.சஞ்சித் | கிறிஸ்தவம் | 1ம் இடம் |
| தி.றிஸ்வானா | நடனம், புவியியல் | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் : 11 மாணவர்கள் (2024)

| மாணவர் பெயர் | பாடம் | இடம் |
|---|---|---|
| ம.ரஸ்மியா | கணிதம், சைவநெறி, ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, சித்திரம், புவியியல், மனைப்பொருளியல் | 1ம் இடம் |
| சி.கோபிஷா | சங்கீதம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | கணிதம், சைவநெறி, ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் | 2ம் இடம் |
| கு.நிசானா | நடனம் | 1ம் இடம் |
| | மனைப்பொருளியல் | 2ம் இடம் |
| | கணிதம், தமிழ், ஆங்கிலம், சைவநெறி, விஞ்ஞானம், வரலாறு, புவியியல் | 3ம் இடம் |
| வி.பவிசா | சங்கீதம் | 2ம் இடம் |
| | மனைப்பொருளியல் | 3ம் இடம் |
| சி.கென்சிகா | நடனம் | 2ம் இடம் |
| நி.தனுஜன் | சித்திரம், சுகாதாரம் | 2ம் இடம் |
| சி.அஜய் | சித்திரம், சுகாதாரம் | 3ம் இடம் |

## க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சை பெறுபேறுகள் - 2024(2025)

| மாணவர் பெயர் | பரீட்சைப் பெறுபேறுகள் |
|---|---|
| ம.றஸ்மியா | 2A, 2B, 5S |
| சி.கோபிசா | 3B, 1C, 5S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் - 2024

| மாணவர் பெயர் | பரீட்சைப் புள்ளிகள் |
|---|---|
| பா.அஜய் | 127 |
| ஜீ.யஸ்ரினா | 118 |
| ச.சானுஜா | 109 |
| வி.வஸ்மிதா | 102 |
| ச.ரஸ்மிகா | 92 |
| ச.வைஸ்ணவி | 87 |
| ச.சங்கீத் | 75 |
| ர.சஞ்சனா | 75 |

இணைப்பாடவிதான செயற்பாடுகள் - 2024

**1. மனைப்பொருளியல் போட்டி**

ம.றஸ்மியா கோட்டமட்டம் 2ஆம் இடம்

**2. விளையாட்டுப் போட்டி**

கு.திசானா குண்டெறிதல் கோட்டமட்டம் 1ஆம் இடம்
தட்டெறிதல் கோட்டமட்டம் 3ஆம் இடம்

க. கம்சி 400m கோட்டமட்டம் 1ஆம் இடம்

ச.சகானா உயரம் கோட்டமட்டம் 2ஆம் இடம்

**3. தமிழ்த்தினப் போட்டி**

**பாவோதல் போட்டி - 2ஆம் பிரிவு**

நி.ரிஸ்யா கோட்டமட்டம் 3ஆம் இடம்

**கட்டுரைப்போட்டி - 2ஆம் பிரிவு**

வ.செமித்தா கோட்டமட்டம் 2ஆம் இடம்

**சிறுகதைப்போட்டி - 4ஆம் பிரிவு**

சி.கோபிசா கோட்டமட்டம் 3ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Optimal Results-2024

| | தரம் | பெயர் | சராசரி |
|---|---|---|---|
| 1. | 3 | க.சபினா | 78.3% |
| 2. | 3 | பா.டிலானி | 80.3% |
| 3. | 4 | அ.அன்சீர் | 86.4% |
| 4. | 4 | க.நிதுசன் | 78.3% |
| 5. | 4 | அ.தஸ்மிகா | 75.5% |
| 6. | 5 | பா.அஸஜய் | 78.6% |
| 7. | 5 | ச.சானுஜா | 79.6% |
| 8. | 6 | நி.ரிஸ்யா | 78% |
| 9. | 7 | செ.தீபிகா | 81% |
| 10. | 10 | சு.கேனுஜா | 75% |

**பாடசாலைகளுக்கான மாணவர் வரவு ஒழுங்கு**

1 ச.ஹரிஸ் தரம் 8

2 ச.சாணியா தரம் 10

**அறநெறிப் பாடசாலை வரவு ஒழுங்கு**

1. பா.அஜய் தரம் 6
2. ச.வைஷ்ணவி தரம் 6
3. ர.சாகானா தரம் 7
4. ச.சாகானா தரம் 9
5. செ.யஸ்மிதா தரம் 7

**மிதிவண்டி - க.பொ.த.(சா.த)-2024 சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி**

செல்வி.மதனராசா றஸ்மியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் வரவு ஒழுங்கிற்கான விருது 2024

செல்வி.ராஜினி சுப்பிரமணியம் (விஞ்ஞான ஆசிரியர்)

## கடமையிலுள்ள ஆளணிகள் விபரம்

| No | Full Name | 1st Appt. Subject, Teaching Subject | Higher Education Qualification | Higher Professional Qualification | Service Grade |
|---|---|---|---|---|---|
| 1 | Mr.Rajah Jeyakkumar | Primary | BA | PGDE | SLPS I |
| 2 | Mrs.Gwory Chanramohan | Primary | Bcom | PGDE | SLTS I |
| 3 | Mrs.Kirisha Kirubanantha Jeyakumar | Drama | BA | | SLTS 2 - II |
| 4 | Mrs.Sivatharsiny Sribalraj | Primary | A/L | B.Edu | SLTS I |
| 5 | Mrs.Thevasena Puvanenthiran | Primary | A/L | Primary Tra | SLTS I |
| 6 | Mrs.Anet Sutharsini Jenankanijude | H.Sci | A/L | Sp. Tra | SLTS 2 - II |
| 7 | Mrs.Thureswary Satheeskaran | Tamil | BA | | SLTS 2 - II |
| 8 | Mr.Pasupathy Suthesh | Maths | A/L | B.Edu | SLTS 2 - II |
| 9 | Miss.Subramaniyam Rajini | English | BA | M.Edu. | SLTS I |
| 10 | Mrs.Tharmananthy Thirulogasanthar | English | A/L | Sp. Tra | SLTS I |
| 11 | Mrs.Usajini Kumanan | Religion | A/L | Sp. Tra | SLTS I |
| 12 | Mr.Jeyamohan Pridmen | ICT | BICT | PGDE | SLTS 2 - II |
| 13 | Mr.Rasaratnam Sivakumar | Com.Maths | BSc | M.Phil(Edu) | SLTS I |
| 14 | Mrs.Rajitha Uthyasankar | Art | BFA | PGDE | SLTS 2 - II |
| 15 | Mr.Rathinasingam Thileepan | Com | BBA | PGDE | SLTS 2 - I |
| 16 | Miss.Murugathasan Piruntha | English | BABM | M.Edu | SLTS 2 - II |
| 17 | Mrs. Pavalamalar Theepan | Primary | BA | PGDE | SLTS 2 - I |
| 18 | Mrs. Sivananthan Inthusha | Dance | A/L | | SLTS 2 - II |
| 19 | Mrs. Fareeda Jenosius | Phy.Edu | BA | B.Edu | SLTS 2 - II |
| 20 | Mr.Rasenthiram Shantharupan | Civics | BA | | SLTS 2 - II |
| 21 | Mrs.Karththika Thileepan | Music | BFA | PGDE | SLTS 2 - II |
| 22 | Ms.Subramanijaijar Srivijayathevi | Civics | BA | | SLTS 2 - II |
| 23 | Mrs.Dayalini Subash | School Labourer | BA | | PKS III |
| 24 | Mrs.Viyajatharsiny Sujan | Development Officer | BA | | DO III |
| 25 | Mr.Rasathurai Chandramohan | Watcher | O/L | | PKS III |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு - 2025





பாராளுமன்றத் தேர்தல் - 2025



கால்கோள் விழா - 2025







சக்கரநாற்காலி வழங்கல் - 2025



நூலக நடமாடும் சேவை - 2025





றோயல் விளையாட்டுகழக
அன்பளிப்பு - 2025





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசளிப்பு விழா - 2024





மரக்கன்றுகள் வழங்கல் - 2025



தூய்மையான இலங்கையின்
செயற்றிட்டம் - 2025





மாணவர் சுகாதாரம் - 2025




மைதான நுழைவாயில் திறப்பு
விழா - 2025






மாணவர் மன்றம் - 2025






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயதசமி நிகழ்வு - 2025





சிறுவர் தினமும் வாணி
விழாவும் - 2025






மாணவர் பாராளுமன்ற தேர்தல்
- 2025





பெற்றோர்களுக்கான
விழிப்புணர்வுக் கூட்டம் - 2025







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலிகைத்தோட்டம் - 2025





## உடற்பயிற்சி





## பொங்கல் நிகழ்வு - 2025





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

இராகம் : பிருந்தாவனசாரங்கா
இயற்றியவர் : பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்
தாளம் : சதுஸ்ர ஏகம்

## பல்லவி

வாழிய வாழிய வாழியவே
கல்வி கலை தரும் ஊரெழு கணேச
வித்தியாசாலை வாழியவே
(வாழிய வாழிய வாழியவே)

## சரணம்

செல்வி கலைமகளும் சேர்ந்து வாழும்
ஊரெழு மேவும் அருள் மிகு திருக்கோயில்
வல்ல வீரகத்தி தெய்வம் வந்தருளும்
திருவாயில் அமைந்த எம் தாயாம் வித்தியாசாலை
வித்தியாசாலை வாழியவே
(வாழிய வாழிய வாழியவே)

செந்தமிழ் ஆங்கிலம் செழுங்கலை விஞ்ஞானம்
முந்து கணிதம் விவசாயம் மனையியல்
பந்து விளையாடல் பாடல் பரதம்
சித்திரமும் தந்து சிறப்புடன் விளங்கும்
வித்தியாசாலை வாழியவே
(வாழிய வாழிய வாழியவே)

அதிபர் ஆசிரியரை அனுதினம் பணிகுவோம்
மதித்தவர் கல்வி கலை மாண்புடன் பயிலுவோம்
அதிரூபமாய் ஒழுக்கசீலராய் வாழுவோம்
ஆனந்த வாழ்வு தந்த அன்னையினைப் போற்றுவோம்
வித்தியாசாலை வாழியவே
(வாழிய வாழிய வாழியவே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அதிபர், பொறுப்பாசிரியர்களுடன்**
**மாணவர் தலைவர்கள்**



**பாடசாலை அபிவிருத்தி**
**நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org